# முதல் விசாரணை தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | SC. 301/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | அ.சா–10 (PW–10 ) |
| பெயர் | :- | மருத்துவர் கோகுலரமணன் |
| தேதி | :- | 23–07–2025 |

**மனு அனுமதிக்கப்பட்டு சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன். இறப்பு சம்மந்தமான என்னுடைய இறுதி கருத்துரை அப்போது கட்டில் கலந்துவிட்டதால் குறியீடு செய்ய முடியவில்லை. சடலகூராய்வு அறிக்கை மற்றும் ரசாயன பரிசோதனை அறிக்கை ஆகியற்றை பரிசீலித்தபின் இறந்துபோனவர் அவருடைய உடலில் ஏற்பட்டிருந்த பல்வேறு காயங்களின் விளைவாக இறந்திருக்கலாம் என்றும் மேலும் அவரது உடலில் சீரான குழாய் துப்பாக்கியிலிருந்து வெளியேறிய தோட்டாக்களினால் ஏற்பட்ட காயங்கள் என்பதற்கான தடயங்கள் இருந்தன என்றும் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். அந்த இறுதி கருத்துரை **அ.சா.ஆ–**11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**01 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

மலை பிரேதேசத்தில் செங்குத்தான மேட்டிலிருந்து கீழே விழுந்தால் இறந்துபோனவரின் கை, தலை, முகம் ஆகிய உறுப்புகளில் சிதைவு

காயமும் சிராய்ப்பு காயமும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் நான் சடல கூராய்வில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. பொதுவாக ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வேறு விதமான காயங்கள்தான் ஏற்பட வாய்ப்புண்டு.

சடலகூராய்வு அறிக்கையில் நான் சொல்லியுள்ள அனைத்து வெளிபுற காயங்களும் செங்குத்தான பாதையிலிருந்து தள்ளி விட்டாலோ தவறி கீழே விழுந்தாலே உருண்டு கரடு முரடான பகுதியில் அடிப்பட்டு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் மேற்சொன்ன காயங்கள் மட்டும் தனித்து ஏற்பட வாய்ப்பில்லை. விழுந்தால் ஏற்படகூடிய காயங்கள் தனியாக உள்ளன. அதுபோன்ற காயங்கள் இல்லை. 6 ஆம் காயமாக சொல்லப்பட்ட காயங்கள் அனைத்தும் ஒருசேர இருந்தது என்றால் சரிதான். அந்த காயத்தின் ஆழம் எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பரந்து இருந்ததால் சொல்லவில்லை. பெரிய பரப்பளவில் ஆழம் வேறுபடும் என்பதால் சொல்லவில்லை. உறுப்புகள் வெவ்வேறு என்றாலும் காயங்கள் இணைந்திருந்தன. அந்த பகுதியில் தோட்டாக்கள் பட்டு துளைத்துக்-கொண்டு வெளியேறிதற்கான தடயங்கள் இல்லை என்றால் சரிதான். சிதறியதற்கான தடயங்கள் இருந்தன. நாட்டு துப்பாக்கியால் சுட்டால் தோட்டாக்கள் உடலின் உள்ளே புகுந்து வெளியேற வாய்ப்புள்ளது என்றால் தோட்டாவின் தன்மை மற்றும் சுடும் தூரம் இவற்றை பொறுத்து வேறுபடலாம்.

இறந்துபேனவர் நாட்டு துப்பாக்கியை வைத்திருந்து தவறுதலாக கையாண்டு வெடித்திருந்தால் அந்த காயம் ஏற்பட வாய்ப்புண்டா அதற்கும் சாத்தியம் உண்டு. நுரையீரலில் ரத்தம் செறிந்து காணப்பட்டது என்றால்

சரிதான். மூளையில் ரத்த அடைப்பு இல்லை. ரத்தம் வெளியேறி இருந்தது. நான் தனிப்பட்ட காயங்களை இணைத்து ஒருசேர கூறுவது மருத்துவ சட்டவியலுக்கு எதிரானது என்றால் சரியல்ல.

சடல கூராய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கும்போது வழக்கின் வரலாறும் காவல் துறையினர் கொடுப்பார்கள் என்றால் சரிதான். துப்பாக்கி தோட்டாக்கள் இருந்ததாக சொல்லும் 06 ஆம் காயம் காவல் துறையினர் சொல்லி நான் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள அனைத்து காயங்களும் காவல் துறையினர் எனக்கு கொடுத்த வழக்கின் வரலாறில் இருந்து காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கு இணங்க எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மலையில் இருந்து கீழே விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் வாய்ப்பு இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

இரு நபர்கள் சண்டை போட்டு கொள்ளும்போது தற்காப்பிற்காக துப்பாக்கியை மடக்கி பிடுங்கும்போது அல்லது பிடிக்கும்போது அவ்வாறு காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் அதற்கும் வாய்ப்புண்டு.

**02 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge, Salem.